dear masters

# மறுபிறப்பு

20 AUGUST 2024



மறுபிறப்பு
ஓர் புதுவித பிறப்பு

அதீந்திரிய விஞ்ஞான உலகத்தில் பற்பல முக்கிய ஆய்வுகளை மேற்கொண்ட அமெரிக்க நாட்டைச் சேர்ந்த 'Echo Bodine' அவர்கள், அவற்றின் பயன்களை பல சாஸ்திர புத்தகங்களில் எழுதியுள்ளார். அவற்றில் 'Echoes Of the Soul' என்ற நூலிலிருந்து சில விசேஷ செய்திகள் இதோ நமக்காக...

இந்த பூமியின் மீது ஒவ்வொரு உயிருக்கும் 'பிறப்பு' என்பது ஓர் புதிய அற்புதம்!

அது மறுபடியும் உயிர் கொடுக்கும் ஓர் புதுமைமிகு பிறப்பிற்கு ஆரம்பம்!

ஆகையினால், குழந்தைகளுக்கு உயிரை அளிக்கும் ஒவ்வொரு தாய்மார்களும் தனது மனதில் அன்பை நிரப்பியும்.. தமது இதய வாசல்களை விசாலமாக திறந்து வைத்தும்.. பிள்ளைகளை இவ்வுலகிற்கு அன்புடன் வரவேற்க வேண்டும். ஏனென்றால், நாம் நினைக்கின்றபடி நமக்குப் பிறக்கப் போகும் பிள்ளைகள் 'எதுவும் தெரியாத பச்சிளங் குழந்தைகள்' என்பது கிடையவே கிடையாது.

அவர்கள் பல்வேறு உன்னத தளங்களிலிருந்து உலக நன்மைக்கான தம்முடைய செயல்களில் ஈடுபட்டு.. இந்த பூலோகத்தில் தம்முடைய அவசரத்தைப் பொறுத்து, பிறவியை தேர்ந்தெடுத்து பிறக்கும் உயர்ந்த ஆன்மாக்கள். அதற்காகவே அவர்களுக்கு சில நாட்கள் பிடிக்கலாம்.. சில மாதங்கள் பிடிக்கலாம் அல்லது சில வருடங்கள் ஆகலாம்.

மிகவும் கஷ்டப்பட்டு தன்னுடைய பிறப்பின் சரியான 'திட்டவட்டங்களை எழுதிக்கொண்டு, இந்த உன்னத ஆத்மாக்கள் தமதான அறிவு, சக்தி, ஞானம், தேர்வு இச்சை, மற்றும் இலட்சியங்கள் ஒருங்கே கொண்டிருக்கும். அவற்றையெல்லாம் தீர்ப்பதற்காகவே சரியானதொரு சூழ்நிலைகள் பூலோகத்தில் ஏற்படும் வரை மேலுலகத்தில் இருந்தபடியே பொறுமையாக எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள்.

சில ஆத்மாக்கள் தமது பழைய சொந்தங்களோடு இணைந்திருக்கவே விரும்புவதால் அந்தந்த குறிப்பிட்ட குடும்பத்திலேயே பிள்ளைகளாக, உறவினர்களாக அல்லது நண்பனாகவும்கூட பிறவியெடுப்பார்கள்.

இவ்வாறு ஒரு குழந்தை பிறப்பதற்குப் பின்னால் இவ்வளவு கதை நடக்கிறது. இனி பிறந்ததும் அந்த ஆத்மாக்களுக்கு ... தாம் நினைத்த லட்சியங்கள் மற்றும் இங்கிருக்கும் சூழ்நிலைகளுக்கு இடையில் இருக்கும் அனுகூலமான, அனுகூலமற்றவற்றை புரிந்து கொள்வதற்கு அதிகமான சக்தியும் நேரமும் தேவையாக இருக்கும். ஆகையால், பிறந்த உடனே குழந்தைகள் ஒரு நாளைக்கு சராசரி 22 மணி நேரம் உறங்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

உறக்கத்திலேயே அந்த உலகத்திற்கும் மற்றும் பூலோகத்திற்கும் இடையேயான தமது புரிதல்களை நினைவுபடுத்திக் கொள்வதால் ... ஒருமுறை அழுதவாறும் ஒருமுறை உடல் சிலிர்த்தபடியும்.. இப்படியாக ஏதோவொரு சேஷ்டை மூலம் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும்.

கர்ப்பவதியான தாய்மார்கள் பலர் புலனறிவிற்காக என்னிடம் கவுன்சிலிங்காக வருவார்கள்.

"என் குழந்தை எப்படி இருப்பான்?"
"டெலிவரி எப்படி நடக்கும்?"
"குழந்தை நல்லபடியாக வெளியே வருவானா?"
"நார்மல் டெலிவரி ஆகுமா? இல்லை ஆபரேஷன் ஆகுமா?"

என்று தாய்மார்கள் தொடுக்கும் கேள்விகளுக்கு சமாதானங்கள் கண்டுபிடிக்கவே நான் ஒவ்வொரு முறையும் பிரசவ அறையிலேயே இருந்து விடுவேன். சாதாரணமாக புதியதாக பிறப்பெடுக்கும் ஒவ்வொரு ஆன்மாவும் தாயின் கர்ப்ப காலத்தில் 9 மாதங்கள் தனது புதிய சரீரத்துடன் இணைந்திருக்கும்.

தாயின் கருவில் வளரும் தனது புதிய சரீரத்தை தொடர்ந்து கணக்கிட்டவாறே இருக்கும். தமது புதிய தாய் தந்தையர்கள், உடன்பிறப்புகள் மற்றும் பந்துக்களுடன் ஒருபுறம் அறிமுகம் செய்து கொள்ள முயற்சிக்கும். மறுபுறம் மேலுலகத்தில் தனது பயணத்தை திட்டம் தீட்டிய வண்ணம் இருக்கும்!

சில முறை அது தாயின் கருவில் இருக்கும் தனது சிறிய சரீரத்திற்குள் முன்னதாகவே பிரவேசித்து .. பிரசவம் மூலமாக வெளியே வரலாம். அல்லது கர்ப்ப காலத்தில் கஷ்டப்பட்டு வளருவது மற்றும் பிரசவ வேதனையோடு இருட்டான இறுக்கமாக உள்ள பிரசவ துவாரத்தின் வழியாக சிரமப்பட்டு மரண வேதனையோடு வெளியே வர விருப்பம் இல்லாமல் சிசு வெளியே வருகின்ற அத்தருணத்திற்காக காத்திருந்து .. வெளியே வந்ததும் சட்டென்று புதிய சரீரத்திற்குள் நுழைந்து விடலாம்!

அவ்வாறு இறுக்கமான சிறிய சரீரத்திற்குள் பிரவேசிப்பது என்பது, வளர்ச்சி பெற்ற ஆன்மாக்களுக்கு மிகுந்த கடினமாக இருக்கும்! ஆகையால் முடிந்த வரையில் அவை பிரசவமாகி குழந்தை பிறந்ததும் உடலுக்குள் பிரவேசிக்கும்.

ஒருமுறை நான், "பிறப்பு இறப்பு.. இறப்பிற்குப் பின் மறுபடியும் பிறப்பு" என்ற தலைப்பின் மீது எடுத்த செமினாரில் பங்கேற்ற ஒரு GYNEGOLOGIST மகளிர் மருத்துவர் இவ்வாறு கூறினார்.

"இந்த அற்புதமான ஆன்ம விஞ்ஞானத்தை மகிழ்ச்சியுடன் எல்லா மருத்துவர்களுக்கும் வழங்கிட வேண்டும். அப்போதுதான் ஓர் புதிய கோணத்தில் நாங்களும் பிரசவ அறையில் எங்களின் சேவைகளை அளிப்போம் என்று.



குழந்தைகள் பிறக்கும் சமயம், ஒரு பெண் நிறைமாத கர்ப்பிணியாக இருக்கின்ற சமயத்தில், பாவம் அவளால் நடக்க முடியாமல், நிற்க முடியாமல், உட்கார முடியாமல், சாப்பிட முடியாமல் மேலும் படுக்ககூட இயலாமல் பல அவஸ்தைகள் படுவாள். அதனை பார்க்கும் நெருங்கியவர்கள், ஐயோ பாவம் இன்னும் பிரசவம் ஆகவில்லையா என்று கவலைப்படுவார்கள்!

குழந்தையின் ஷாப்பிங்குகள் அல்லது சீமந்தம் மற்றும் நர்சிங் டிரைனிங் இவற்றினால் சில காலம் கழிந்தாலும் .. ஒன்பதாவது மாதம் வந்ததுமே, எப்படா!.. என்று அனைவருமே குழந்தைக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். சுகப்பிரசவம் சீக்கிரம் ஆகவேண்டுமென்று கர்ப்பிணி பெண்களிடம் முடிந்தவரை வாக்கிங் செய்தல், படிக்கட்டுகள் ஏறி இறங்குதல், மற்றும் யோகா போன்ற எளிய உடற்பயிற்சிகளை செய்விப்பார்கள்.

ஆனால் நாம் இங்கு தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கிய விஷயம் என்னவென்றால் .. குறித்த பிரசவ தேதி தாண்டி விட்டாலும் சரி.. எப்போது ஆத்மா, தான் புதிய சரீரத்திற்குள் பிரவேசிப்பதற்கு சித்தமாக உள்ளதோ அப்போதுதான் தாய்க்கு சுகப்பிரசவம் நடைபெற்று குழந்தை சரீரம் வெளியே வருகிறது. அதுவரை தாய் எவ்வளவு முட்டினாலும், எவர் எவ்வளவு முயற்சி செய்தாலும் .. பிரசவம் என்பது நடக்கவே நடக்காது.



ஆகவேதான், புதிய சரீரத்திற்குள் பிரவேசிப்பதற்கு:
1. தாமதம் செய்யும் ஆத்மாக்களினால்..(Overdue) தாமதமான பிரசவங்கள் என்றும்,
2. மிகுந்த உற்சாகம் காட்டும் ஆத்மாக்களினால்..(premature) குறித்த தேதிக்கு முன்கூட்டியே நடக்கும் பிரசவங்கள் என்றும்,
3. பிறப்பைக் குறித்து முழு தயார் நிலையில் உள்ள ஆத்மாக்களால்.. எவ்வித குழப்பமும் இல்லாத ( Normal) சுகப்பிரசவங்கள் என்றும் அழைக்கப்படுகிறது.

இவ்வாறு ஆத்மா நினைத்தால் மட்டுமே பிரசவம் நடைபெறுகிறது. ஆக, பிரசவத்தை விரைவாக முடிக்கும் வழிமுறைகளாலும் மற்றும் அறுவை சிகிச்சைகளாலும் எதுவும் நடக்காது. இதற்கு என் மகனே ஒரு சிறந்த உதாரணம்.. அவன் பிறக்கும்போது டாக்டர்கள் குறித்த பிரசவ தேதி அக்டோபர் 6. இருந்தாலும் 13ஆம் தேதி வரை எனக்கு வலியே ஏற்படவில்லை. நான் மருத்துவமனைக்குச் சென்று மருந்துகள் உதவியுடன் பிரசவத்திற்குத் தயாராக இருந்தாலும் பயன் ஒன்றும் இல்லாததால் மருத்துவர்கள் என்னை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

கர்ப்பம் மிகவும் பாரமாகி எனக்கு அடியெடுத்து வைப்பதே மிகவும் கஷ்டமாயிற்று. அதன் பிறகு ஒரு வாரம் கழிந்த பிறகும் கூட எனக்கு பிரசவம் ஆகவில்லை. இப்போது உடலின் நிலை.. எனக்குச் செய்யத் தோன்றும் போதே எப்பணியாயினும் செய்வேன். ஆக, ஆன்மா தான் குறிப்பிட்டபடியே தனது பணிகளை செய்கிறதே தவிர, "நாம் விரும்பியபடி அல்ல" என்ற உண்மையை நாம் நிச்சயம் புரிந்து கொள்ள வேண்டும்!



ஒருமுறை, எனது க்ளைண்டின் விருப்பத்திற்கேற்ப அவளின் பிரசவ அறையில் இருந்தேன்.

ஏன் பெரிதாக வலிகள் வரவில்லை?! பிரசவ துவாரம் ஆகி குழந்தையின் தலையும் தெரிகின்றதென்று மருத்தவர் பயந்து குழந்தையை வெளியே தள்ளும்படி தாய்க்கு அறிவுறுத்தினார்கள்!

இருப்பினும், பயனில்லாததால் நான், என் அதீந்திரிய சக்திகளை உபயோகித்து புதிய சரீரத்திற்குள் பிரவேசிக்கப் போகும் அந்த ஆத்மாவை தேட முயற்சித்தேன். நீண்ட நேரத்திற்குப் பிறகு மேலுலகத்திலுள்ள ஒரு பெரிய நூலகத்தில் ஒரு பெரியவர் அமைதியாக அமர்ந்தபடி படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்!

காரணம் கேட்க, "எனக்கொன்றும் அவசரம் இல்லை! எப்படியோ அங்கே வந்ததும் பல காலம் அங்கேயே இருந்துவிட வேண்டுமே!

நான் இந்த பூமியில் இருந்து வந்து நூறு வருடங்கள் ஆனது. இதற்குள்ளாக பல தலைமுறைகள் கடந்து போய்விட்டது. இப்போது 'பிறப்பு' அங்கிருக்கும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு என்னை எப்படி இணைத்துக் கொள்வது என்று இந்த புத்தகங்களையெல்லாம் படித்துக் கொண்டிருக்கிறேன். உண்மையில் என் தாய், நான் தந்தையாக தேர்வு செய்து கொண்ட மனிதரை திருமணம் செய்து கொள்ளவில்லை. புதிய மனிதருக்கு நான் மகனாக வேண்டுமே.. அதற்கு உகந்த ஞானத்தை சம்பாதித்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினார்!

"பிரசவம் எவ்வாறு நடக்கப் போகிறது?" என்று கேட்டதற்கு,

நான் மிகவும் உயரம். எனது பெரிய சரீரம் அவ்வளவு சிறிய சரீரத்தில் பிறக்க வேண்டும் என்றால் கொஞ்சம் கஷ்டம்தான். இருந்தாலும் முயற்சிக்கிறேன். அவசரம் ஒன்றுமில்லை. ஒருமுறை அதில் பிரவேசித்தால்.. எத்தனையோ ஜென்மங்களாக நான் பெற்ற ஞானமெல்லாம் மறந்து போய்விடும். ஆகையால் இன்னும் சிரத்தையாக இந்த புத்தகங்களையெல்லாம் படித்துவிட்டு அதன்பின் பிறக்கிறேன். பிரசவம் கொஞ்சம் கஷ்டமாகவே இருக்கும், என் வருங்கால அம்மாவிற்கு" என்று சொன்னார்!

அதற்குப் பிறகு, நான்கு வாரங்கள் கழித்து கொஞ்சம் கஷ்டமாகவே அவளுக்குப் பிரசவம் நடந்தது. தன் குழந்தை அச்சு அசலாக தான் கூறிய ஆன்மாவின் அடையாளங்களோடு பிறந்தது என்று அவள் கூறினாள்!

சிலமுறை ஆன்மாக்கள் தான் பிரசவிக்கும் அறையிலேயே இருந்து.. தமது வழிகாட்டும் ஆன்மாக்களுடன் உரையாடி.. இடை இடையே தமது புதிய சரீரங்களையும் மற்றும் பிரசவ வேதனையில் உள்ள தாய்மார்களை பார்த்து வருவதையும் நான் கவனித்தேன். தம்மீதும் ஓர் பார்வை வைக்குமாறு வழிகாட்டி ஆன்மாக்களை அவர்கள் வேண்டுவதையும் நான் கேட்டுள்ளேன்!

சில முறை குழந்தை வெளியே வரும் சமயத்தில் எங்கிருந்தோ ஓர் ஆன்மா ஓடி வந்து புதிய சரீரத்தில் நுழைவதை பார்த்தேன். இரண்டு மூன்று கஷ்டமான பிரசவங்களில் தந்த நேரத்தில் பிரசவ அறையில் இருக்கும் ஆன்மாக்கள் அங்கு நடப்பதையெல்லாம் கவனித்தபடி தனது தாய்க்கு உதவி புரிந்தும், தாயை அரவணைப்பதையும் நான் கவனித்துள்ளேன்!

ஒருமுறை என் உறவினர் இப்படி சிறிது கடினமாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது நான் அவருடைய கர்ப்பத்தின் மீது என் கைகளை வைத்து அவருக்கு சக்தியை கொடுத்தேன். விசித்திரமாக ஓர் 'ஆண் ஆத்மா' என் கைகள் வழியாக அவளின் கர்ப்பத்திற்குள் நுழைந்தது. அதுவரை கஷ்டப்பட்டு வலியால் துடித்துக் கொண்டிருந்த அந்த உறவினர் ஓர் 'அதிர்வுக்கு' உட்பட்டு எளிதாக குழந்தையை பெற்றது மருத்துவரையே அசர வைத்தது. அக்குழந்தையின் பெயர் 'Blacky' !

ஆனால் பிரசவித்த பிறகுதான் கதையே வேறு மாதிரியானது.



ஆனால் பிரசவித்த பிறகுதான் கதையே வேறு மாதிரியானது. பிறந்தது முதல் Blakey அழுதுகொண்டே இருந்தான். பால் குடிக்கவில்லை.. தூங்குவதுமில்லை. விஷயம் தெரிந்து கொள்ளலாம் என்று நான் தியானத்தில் அமர்ந்து என் மார்க்கதரிசி ஆன்மாவை அழைத்தேன். அவன் எனக்கு முன் தோன்றி அந்தக் குழந்தையை 'டேனியல்' என்று அழையுங்கள். அதுவே மேல் உலகத்தில் அவனுடைய பெயர் என்று தெரிவித்தது!

அப்போது நான் அந்த சிறிய பையன் சரீரத்தில் இருக்கும் ஆன்மாவுடன் டெலிபதி நிர்வகித்து 'டேனியல்' என்று அன்பாக.. அழைத்து, "உனக்கு நான் எந்த வகையில் உதவ முடியும்?" என்று கேட்டேன். "எனக்கு இங்கு மிகவும் பயமாக உள்ளது. நான் திரும்பிச் சென்று விடுகிறேன்" என்று அந்த ஆன்மா சொல்ல, நானோ என் வழிகாட்டி ஆன்மாவோடு குழந்தையை என் மடியிலேயே வைத்துக் கொண்டு 'டேனியல்!" என்று பிரியமாக அழைத்து அதிக நேரம் வரை உறங்கச் செய்தேன்!

இவ்வுலகத்தில் தனதோர் புதிய வாழ்க்கை மிகவும் நன்றாக இருக்கும் என்றும், உன்னுடைய தாய், தந்தையர்கள் மிகவும் நல்லவர்கள் என்றும் .. நீ நினைத்தது எல்லாம் பூர்த்தி செய்வதற்கு அவர்கள் பெரிதும் துணை புரிவார்கள் என்றும் எடுத்துச் சொல்லி அவனை அரவணைத்தேன்!

நான் கூறியபடி அனைவரும் அந்த குழந்தையை 'டேனியல்' என்று அழைக்க, சில வாரங்களிலேயே சூழ்நிலைக்கு பழக்கப்பட்ட 'Blakey' அதன் பிறகு சுகமாக கைகளையும், கால்களையும் அசைத்து சுழன்று விளையாடினான். நான் எப்போது சந்தித்தாலும் அவன் என் கண்களுக்குள் பார்த்து நன்றி உணர்வோடு புன்னகைப்பான்!

இவ்வாறு 'பிறப்பு' குறித்து ஆத்மாவிற்கு இருக்கும் புரிதலைப் பொறுத்தே பிரசவம் என்றாலும், சிசு மரணங்கள் என்றாலும், கருச்சிதைவு மற்றும் குறைப்பிரசவம்.. போன்றவை நடைபெறும்" என்பதை நாம் முதலில் உணர வேண்டும்!

என் தோழியின் குழந்தை விகாரத்துடன் பிறந்து சில நாட்களுக்குள்ளாகவே இறந்து விட்டான். தாயின் கவலையை பார்க்க முடியாமல் நான் தியானத்தில் அமர்ந்து அந்த ஆன்மாவோடு உரையாடினேன்!

உண்மையில் எனக்கு நல்ல (Athletic) பலசாலியான சரீரம் வேண்டும். இவ்வாறு விகாரமான சரீரத்தில் நான் இருக்க மாட்டேன். எனக்கு தெரியும் நான் இவ்வாறு திரும்பிச் செல்வது அக்குடும்பத்திற்கு பெரும் துயரமே இருப்பினும் .. அத்தகைய சரீரத்தில் இருந்துகொண்டு வாழ்க்கையை வீணடிக்க எனக்கு இன்னும் பெரும் கவலைதான்! எனக்கு அந்தக் குடும்பத்திலேயே பிறக்க வேண்டும் என்ற ஆசை உள்ளது. ஆகையால் எனது அம்மா மறுபடியும் கருத்தரிக்கும் வரையில் காத்திருப்பேன் என்று சொன்னது!

சில நாட்களுக்குப் பிறகு அவள் திரும்பவும் கர்ப்பவதியானாள். ஒரு அழகான குழந்தைக்கு உயிரளித்தாள். இப்பொழுது அவன் ஒரு சிறந்த (அத்லெட்) மல்லன்!

இவ்வாறு புதிய ஜென்மாவை எடுக்கப் போகும் ஆன்மாக்களின் பயணமானது அவர்கள் பிறக்கப் போகும் குடும்பத்தைப் பொறுத்தே அமையும். புதிய சரீர வளர்ச்சியாலும், சுற்றியுள்ள சூழ்நிலைகளாலும் சிறிதளவு மாறுபாடு ஏற்பட்டாலும் அவை தமது வரவின் முடிவை மாற்றிக் கொள்ளும். கருச்சிதைவுகள்கூட இப்படித்தான் நடைபெறுவதுண்டு!



ஆனால் நாம் இங்கு உணர வேண்டியது என்னவென்றால், கருச்சிதைவு, குறைப் பிரசவங்கள், பிரசவ மரணங்கள் .. அவை யாவும் குழந்தையின் சரீரங்களை மட்டுமே நஷ்டப்படுத்துமே தவிர, அதில் உள்ள ஆத்மாவிற்கு ஒன்றுமாகாது!

ஒருவேளை வலுக்கட்டாயமாக கருச்சிதைவு, அபார்ஷன் செய்து கொள்கின்ற சந்தர்ப்பங்களில் மட்டும் ஆன்மா சில குழப்பத்திற்கு ஆளாகிறது. அதனால் அந்த ஆன்மா இனி அக்குடும்பத்திற்குள் வருகின்ற தீர்மானத்தை மாற்றுவதோடு .. அந்தப் பெண்ணை மீண்டும் எப்போதும் தனது தாயாக தேர்வு செய்யாது!

அவ்வாறே ஒரு முறை எதிர்பாராத சூழ்நிலையில் கருத்தரித்த தாய் சமூக பயத்தின் காரணமாக வயிற்றில் உள்ள குழந்தையோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் போவாள். அத்தகையான சூழ்நிலையில் கர்ப்பத்தில் பிரவேசிப்பதற்கு ஆன்மா தயாராக இல்லாத காரணத்தால் கர்ப்பம் கலைந்து விடுவதுண்டு!

இத்தகு சந்தர்ப்பங்களில் தீவிரமாக பயத்துக்குள்ளான தாயின் உணர்வுகளால் அவளின் கர்ப்பத்தின் மீது 'பிளாக்ஸ்' போன்று இருந்து விடும். அத்தகையான கர்ப்பத்திற்குள் பிரவேசிப்பதற்கும்கூட முதிர்ச்சி பெற்ற ஆன்மாக்கள் விரும்புவதில்லை.



சில குழந்தைகளை பெற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லாத தாய்மார்கள் மீண்டும் மீண்டும் கருக்கலைப்பு செய்துகொண்டே இருப்பார்கள். இருந்தாலும் சில கர்ம சம்பந்தங்களால் அந்த தாயின் மீது அன்புடன், அவருடனே இணைந்து வாழ வேண்டும் என்று விரும்பி அந்த ஆன்மாக்கள் மீண்டும் மீண்டும் அதற்குள் பிரவேசிப்பதற்கு முயற்சிக்கும்.

இங்கு தாயின் மனநிலையோ .. தனது கர்ப்பத்தை எதிர்க்கும். ஆனால் தாயின் ஆன்மா மட்டும் வரப் போகும் குழந்தை ஆன்மாவுடன் நட்புடன் இருந்து குழந்தையின் வருகைக்காக மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கும்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்த தாய்க்கு தகுந்த ஆலோசனைகள் கொடுப்பதின் மூலம் அவருக்குள் இருக்கும் பயங்களை அகற்றி, அவரை மன்னிப்பு கேட்க வைத்து, அவருக்குள் ஒரு தெளிவை ஏற்படுத்த வேண்டும். அப்போது காயப்பட்ட மனதுடன் இருக்கும் அந்த தாய், பிள்ளையின் ஆன்மாவுடன் இணைந்து ஒரு புதிய பிறப்பிற்கு வழிவகுக்கும்.

இவ்வாறு லிங்க பேதத்துடன் வந்த மாறுபாட்டின் காரணமாக இருந்தாலும் சரி, சரீரத்தில் வந்த வேறுபாடாக இருப்பினும் சரி.. ஆன்மாவின் விருப்பம் இல்லாமை, மற்றும் தாய், குழந்தையின் கர்ம பலன்களால்தான் கர்ப்பத்தில் எதிர்பாராத சங்கடங்கள் நடந்தேறுகிறது.

ஒருமுறை என் சிநேகிதி 'வேலரி' பிரசவ வலியால் மருத்துவமனையில் சேர்ந்ததை அறிந்ததும் நான் பார்ப்பதற்காகச் சென்றேன். மருத்துவர்களின் கணக்குப்படி டெலிவரிக்கு இன்னும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி வந்தது. அதற்குள் நான் உடனே தியானத்தில் அமர்ந்து குழந்தை ஆன்மாவுடன் பேச என்னை தயார் செய்து கொண்டேன்.



சில குழந்தைகளை பெற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லாத தாய்மார்கள் மீண்டும் மீண்டும் கருக்கலைப்பு செய்துகொண்டே இருப்பார்கள். இருந்தாலும் சில கர்ம சம்பந்தங்களால் அந்த தாயின் மீது அன்புடன், அவருடனே இணைந்து வாழ வேண்டும் என்று விரும்பி அந்த ஆன்மாக்கள் மீண்டும் மீண்டும் அதற்குள் பிரவேசிப்பதற்கு முயற்சிக்கும்.

இங்கு தாயின் மனநிலையோ .. தனது கர்ப்பத்தை எதிர்க்கும். ஆனால் தாயின் ஆன்மா மட்டும் வரப் போகும் குழந்தை ஆன்மாவுடன் நட்புடன் இருந்து குழந்தையின் வருகைக்காக மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கும்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்த தாய்க்கு தகுந்த ஆலோசனைகள் கொடுப்பதின் மூலம் அவருக்குள் இருக்கும் பயங்களை அகற்றி, அவரை மன்னிப்பு கேட்க வைத்து, அவருக்குள் ஒரு தெளிவை ஏற்படுத்த வேண்டும். அப்போது காயப்பட்ட மனதுடன் இருக்கும் அந்த தாய், பிள்ளையின் ஆன்மாவுடன் இணைந்து ஒரு புதிய பிறப்பிற்கு வழிவகுக்கும்.

இவ்வாறு லிங்க பேதத்துடன் வந்த மாறுபாட்டின் காரணமாக இருந்தாலும் சரி, சரீரத்தில் வந்த வேறுபாடாக இருப்பினும் சரி.. ஆன்மாவின் விருப்பம் இல்லாமை, மற்றும் தாய், குழந்தையின் கர்ம பலன்களால்தான் கர்ப்பத்தில் எதிர்பாராத சங்கடங்கள் நடந்தேறுகிறது.

ஒருமுறை என் சிநேகிதி 'வேலரி' பிரசவ வலியால் மருத்துவமனையில் சேர்ந்ததை அறிந்ததும் நான் பார்ப்பதற்காகச் சென்றேன். மருத்துவர்களின் கணக்குப்படி டெலிவரிக்கு இன்னும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி வந்தது. அதற்குள் நான் உடனே தியானத்தில் அமர்ந்து குழந்தை ஆன்மாவுடன் பேச என்னை தயார் செய்து கொண்டேன்.

சட்டென்று 'வேலரி'யுடைய இறந்து போன பாட்டியின் (அம்மாவினுடைய அம்மா) ஆன்மா, அந்த அறையில் தோன்றியது. "பிரசவத்தைக் குறித்த பயத்தின் காரணமாக Valerie குழந்தையை அழைக்க தனது இதயத்தை திறந்து வைக்கவில்லை. தான் குழந்தையை சரியாக வளர்க்க மாட்டேனோ என்று பெரிதும் அச்சம் கொள்கிறாள். ஆனால், கடவுள் அவளுக்கு உறுதுணையாகவே இருப்பார்! இந்த விஷயத்தை அவளிடம் எடுத்துக் கூறு" என்று தெரிவித்தது.

Valerie (வேலரி)க்கு குழந்தையாகப் பிறக்கப்போகும் ஆன்மாவைப் பற்றி நான் கேட்டதற்கு, "அவன் ஒரு ஆண் ஆன்மா! வேறு உலகத்தில் தனது பிரியாவிடை நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளான். பூலோகத்தில் புதிதாக பிறப்பெடுக்கும் அவனுக்கு அங்குள்ள ஆன்மாக்கள் வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றனர். இதெல்லாம் மேல் உலகத்தில் சர்வ சாதாரணம்! அங்கு அவனுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அவனை விட்டுப் பிரிவதற்கு கவலைப்படுகிறார்கள். ஆகையால்தான், அவனுக்கு இவ்வளவு தாமதமாகிறது. இவனும்கூட அவர்களை விட்டு வர முடியாமல் தவிக்கின்றான். அங்கே விழாக்கோலங்கள் முடிவதற்கே இன்னும் 12 மணி நேரமாகலாம்" என்று சொன்னார் (பாட்டி).



நினைத்தபடியே 'வேலரி' கடவுளை பிரார்த்தனை செய்து குழந்தைக்காக தனது இதயக் கமலத்தை விரித்து வைத்தாள். மறுநாள் நன்றாக குழந்தையை பிரசவித்தாள். பிரசவ சமயத்தில் உயரமான, கருத்த கேசத்துடன், கருமை நிறக் கண்களுடன் வேலரியின் கணவனின் ஒத்த தோற்றத்துடன் உள்ள ஓர் ஆன்மா அங்கு தோன்றியது. அந்த ஆன்மாவை நான் வரவேற்றேன்.

தனது தாமதத்திற்காக 'சாரி' என மன்னிப்பு கேட்டு அவன் வேலரியின் கர்ப்பத்திற்குள் நுழைந்து, வெளியே வருவதற்கு அவஸ்தைப்படுகின்ற குழந்தைக்கு உதவி புரிந்தான்.

ஆகவே, பிறப்பாகட்டும்.. இறப்பாகட்டும் ஆன்மாவின் சுதந்திரமான விருப்பம் மற்றும் காலத்தைப் பொறுத்து இருக்கும். அந்த இரண்டு சந்தர்ப்பங்களில் நாம் எவ்விதமான வெளி முயற்சிகள் ஏதும் செய்ய வேண்டியது அவசியம் இல்லை.

அவ்வுலகமாயினும்.. இவ்வுலகமாயினும் ஆன்மாவிற்கு தனது சுய திட்டத்தின்படியே வருதல்.. போதல் இருக்கும். ஆகவே ஆன்மாவின் விஞ்ஞானத்தை ஆக்கப்பூர்வமாக மற்றும் அறிவுப்பூர்வமாக நாம் எப்பொழுதும் உணர்ந்து.. கௌரவிக்க வேண்டும்!



/ முற்றும் /

ஆங்கில மூலம்: 'Echoes of the soul'
தெலுங்கு மொழிபெயர்ப்பு: திருமதி ஜி. வாணி
ஆதாரம்: 'தியான ஜெகத்'
தமிழாக்கம்: திருமதி. உமா பிரசன்னா, சென்னை
( "தியானப்பிரபஞ்சம்" இதழிலிருந்து)